# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.302/2015 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 29 (PW–29) |
| பெயர் | :– | மணிவண்ணன் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜூலைதிங்கள் 28 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினர். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினர்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாநகரம் காரிப்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 02.09.2014 ஆம் தேதியன்று சேலம் ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 9.00 மணிக்கு சேலம் மாவட்டம், சங்ககிரி, அக்கம்மாப் பேட்டையில் வசித்த இந்திரஜித் என்பவரின் மனைவி கலாவதி என்பவர் காவல் நிலையத்திற்கு வந்து எழுத்து மூலம் கொடுத்த புகாரை பெற்று அந்த காவல் நிலைய குற்ற எண்.317/2014 இல் இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 302 ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-38** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கிற்கான முதல் தகவல் அறிக்கையை துரிதமாக அதிகாரவரம்புள்ள நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் என்பதால் உடனடியாக புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் அனுப்பினேன். ஒரு படியை புலனாய்விற்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

கலாவதி 02.09.2014 ஆம் தேதியன்று காலை 9.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தார் என்று நான் சொல்வதும் எழுத்துமூலமாக புகார் கொடுத்தார் என்று நான் சொல்வதும் அந்த புகார்மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்று நான் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கையின் ஒருபடியை காவல் ஆய்வாளருக்கு காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தேன்.

அரியானூர் பேகாட்டில் ரத்த காயங்களுடன் ஓர் ஆண் சடலம் கிடப்பதாக காலை 7.00 மணிக்கு எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்து அந்த

இடத்திற்கு நானும் காவல் ஆய்வாளரும் இதர காவலர்களும் சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. சடலம் கிடந்த இடத்திற்கு அருகிலிருந்தவர்கள் யாரும் புகார் கொடுக்காததால் பின்னிட்டு புகார் புனையப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு வந்திருந்த கலாவதியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று புகார் பெற்றோம் என்றால் சரியல்ல. ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்திலிருந்து அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 25 கி.மீ தூரத்தில் இருக்கும். சாலை வசதியும் பேருந்து வசதியும் உண்டு என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மதியம் 2.00 மணிக்குதான் வந்தது என்றால் சரிதான்.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் பெறப்படவில்லை என்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.